

# பொதுமக்களுக்கான அறிவித்தல்

## காப்புறுதிப் பத்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்யும்போது நீங்கள் கவனிக்க வேண்டிய விடயங்கள்

2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்றுறை ஒழுங்குநெறிப்படுத்தல் அதிகாரச்சட்டத்தின் கீழ் இலங்கைக் காப்புறுதிச் சபை (ஐபிஎஸ்எல்) அமைக்கப்பட்டதன் நோக்கம் யாதெனில், காப்புறுதிப் பத்திரத்தைப் பெற்றவர்கள் மற்றும் எதிர்காலத்தில் அதனைப் பெறவிருப்பவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு, இலங்கையில் காப்புறுதித் தொழில் நேர்மையாகவும் மதிநுட்பமாகவும் நிபுணத்துவமான முறையிலும் செயற்படுவதை உறுதிப்படுத்துவதாகும்.

காப்புறுதிப் பத்திரத்தை கொள்வனவு செய்யும்போதும் காப்பீட்டுக் கொடுப்பனவுகளைக் கோரும்போதும் எதிர்நோக்கப்படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து இலங்கைக் காப்புறுதிச் சபைக்கு முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. ஆகவே, காப்புறுதிப் பத்திரத்தைக் கொள்வனவு செய்யும்போதும் காப்பீட்டுக் கொடுப்பனவுகளைக் கோரும்போதும் பின்வரும் முக்கிய விடயங்களை மக்கள் தமது கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென இத்தால் அறிவுறுத்துகின்றோம்:

- பதிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனம், பதிவு செய்யப்பட்ட காப்புறுதித் தரகு நிறுவனம் மற்றும் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி முகவரிடமிருந்து அல்லது வங்கி-காப்பீட்டுச் சேவை தொடர்பாக காப்புறுதி நிறுவனம் ஒன்றுடன் ஏற்பாடு செய்திருக்கும் வங்கி ஒன்றிடமிருந்து நீங்கள் காப்புறுதிப் பத்திரத்தைக் கொள்வனவு செய்ய முடியும்.
- உங்கள் அறிவுக்கெட்டிய வரை, முற்றிலும் சரியான மற்றும் பூரணமான தகவல்களையே எப்போதும் காப்புறுதி நிறுவனத்திற்குக் கொடுக்கவும். பிரேரணைப் படிவத்தில் சரியான மற்றும் பூரணமான தகவல்களைக் கொடுக்காவிட்டால், நீங்கள் சமர்ப்பிக்கும் காப்பீட்டுக் கோரிக்கையை காப்புறுதி நிறுவனம் நிராகரிக்கக்கூடும். பிரேரணைப் படிவத்தை நீங்களாகவே நிரப்புவது மிகவும் நல்லது. ஒருபோதும் வெற்று விண்ணப்பப் படிவத்தில் கையொப்பம் இடாதீர்கள். பிரேரணைப் படிவத்தைக் கவனமாக வாசித்து விளங்கிக்கொள்வது அவசியமாகும்.
- காப்புறுதிப் பத்திரம் கொள்வனவு செய்யப்பட்டதும், அதிலுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்து விளங்கிக்கொள்வதும், அதில் குறிப்பிடப்பட்டுள்ளது நீங்கள் பெற விரும்பிய காப்பீடுதானா என்பதை உறுதிப்படுத்துவதும் முக்கியமாகும். காப்புறுதிப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வரையறைகள், தவிர்ப்புக்கள் மற்றும் நிபந்தனைகளையும் நன்கு விளங்கிக்கொள்ளவும்.
- காப்புறுதி முகவர் ஒருவரின் ஊடாக காப்புறுதிப் பத்திரத்தைப் பெறுவதாக இருந்தால், அந்த முகவரின் அடையாளத்தை நன்கு உறுதிப்படுத்திக்கொள்ளவும். காப்புறுதிப் பத்திரத்தையும் நீங்கள் செலுத்திய கட்டுப்பணத்திற்கான பற்றுச்சீட்டையும் தாமதமின்றிப் பெற்றுக்கொள்ளவும்.
- நீங்கள் செலுத்த வேண்டிய காப்புறுதிக் கட்டுப்பணம் உரிய திகதியில் செலுத்தப்படுவதை உறுதிப்படுத்தவும். அவ்வாறு செய்யாவிட்டால், உங்கள் காப்புறுதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படும் அல்லது செயலிழந்துவிடும். அதன் பின், நீங்கள் சமர்ப்பிக்கும் காப்பீட்டுக் கோரிக்கை தொடர்பாக காப்புறுதி நிறுவனம் எவ்வித பொறுப்பையும் ஏற்காது.
- காப்புறுதி நிறுவனம் உங்கள் கோரிக்கை தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை உங்களுக்குத் திருப்தி அளிக்காவிட்டால் அல்லது உங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக நீங்கள் கருதினால் அது குறித்து காப்புறுதி ஆளாட்சி அதிகாரியிடம் (ஓம்பட்ஸ்மன்) முறைப்பாடு செய்யலாம். அவரது முகவரி: இல.143A, வஜிரா வீதி, கொழும்பு 05. காப்புறுதி ஆளாட்சி அதிகாரியின் தீர்ப்பும் உங்களுக்குத் திருப்தி அளிக்காவிட்டால், நீங்கள் இலங்கைக் காப்புறுதிச் சபையுடன் தொடர்புகொள்ளலாம்.

IBSL
INSURANCE BOARD OF SRI LANKA

பணிப்பாளர் நாயகம்

இலங்கைக் காப்புறுதிச் சபை

(நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு)

11ஆம் மாடி, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக நிலையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 01.
தொலைபேசி: 011 2396184-9 ஃபெக்ஸ்: 011 2396190
ஈ-மெயில்: info@ibsl.gov.lk இணையத்தளம்: www.ibsl.gov.lk